## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை – 2013

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் என்டபிள்யூஎஸ்டிபீ 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்களின் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)**

**எல்கேஏஎஸ் 2 – பொருளிருப்புகள்:** 2013 திசெம்பர் 31 இல் ரூபா 51.67 மில்லியன் பெறுமதியான வேலைத்தளங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட இருப்பு விடயங்கள் விடயங்களின் வகைகள் அல்லது தன்மை அடிப்படையில் வகைப்படுத்தாமல் களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களின் உபபாகங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திர உப பாகங்கள் என்பவற்றின் இருப்புக்கள் தொடர்பில் ரூபா 458.89 மில்லியன் கூட்டு மொத்தத் தொகைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) மூலதனமாக்கல் நியம அடிப்படையை கருத்திற் கொள்ளாமல் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

மேலும், மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்கள், குழாய்கள் மற்றும் உப பாகங்கள் ரூபா 690.88 மில்லியன் ஆக இருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீகரீதியில் செம்மை செய்யப்பட்ட மீதி ரூபா 707.56 மில்லியன் ஆகும். ஆனால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 16.68 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 107,314.69 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இருப்புக்களில் இருந்த ரூபா 24.24 மில்லியன் தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் இருப்புக்கள் மீதி முறையே அதே தொகையால் குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமானத்தேய்வு ரூபா 1.07 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2002 ஆம் ஆண்டின்போது பத்து ஆண்டிற்காக குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனியிடமிருந்து சபையால் பெறப்பட்ட அம்பத்தல நீர் சுத்திகரிப்பு பொறியில் ரூபா 48.27 மில்லியன் பெறுமதியான சொத்துக்களின் குத்தகைக் காலம் 2012 செப்தெம்பர் 30 இல் காலாவதியாகியிருந்த போதிலும் இது சபையின் சொத்துக்களாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) கிழக்குப் பிராந்திய ஆதார நிலையத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் 77 விடயங்களின் இருப்புக்கள் பெறுமதியிப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 13.68 மில்லியன் மொத்தமான நடைமுறையல்லாச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் இரண்டு தடவை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 228,508 பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. ஆதலால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான இலாபத்தை குறைத்துக் காட்டியதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டது.

(v) தென்பகுதி பிராந்திய ஆதார நிலையத்திற்கு சொந்தமான ரூபா 499.29 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 22.89 மில்லியனால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(vi) வெளிநாட்டு மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 39 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்கள் களனிப் பிராந்திய அலுவலகத்தால் மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ரூபா 1.95 மில்லியன் தொகையான மானியத்தின் காலக்கழிவு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) ஜட்டியாந்தோட்டை நீர் வழங்கல் திட்டத்தின் நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2.64 மில்லியனாக பெறுமதியான காணி 2012 ஆம் ஆண்டில் ரூபா 26.4 மில்லியன் தவறுதலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த தவறு மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படாமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் நடைபெறும் வேலைகள் முறையே ரூபா 23.76 மில்லியனால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,800.86 மில்லியன் தொகையான இருப்பு மீதிகளின் தேறிய பெறுமதி தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பழுதடைந்த இருப்புக்களிற்காக செய்யப்பட்ட ஏற்பாடு தவறான கணிப்பீடுகள் காரணமாக ரூபா 2.81 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) களுத்துறை பிராந்திய களஞ்சியத்திற்கு இலங்கை சுனாமி துறைப் பகுதி மீட்பு மற்றும் மீளெடுப்புச் செயற்திட்டத்திலிருந்து (எஸ்ரீஏஆர்ரீ) பெறப்பட்ட ரூபா 4.23 மில்லியன் பெறுமதியான இருப்புக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், நீர் கொழும்பு உற்பத்தி நிலையத்திற்கு இணையான தண்ணீர் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட 8,246 இருப்பு விடயங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் உள்ளபடியான காசு அசைவு மற்றும் மூலதன நடைபெறும் வேலை என்பவற்றின் கணிப்பீடு இல்லாமல் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சலாக அந்தக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிக்கு இடையில் ரூபா 21,595 மில்லியனான வித்தியாசம் இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செலவழித்த உள்ளபடியான தொகை வேண்டப்பட்ட பதிவேடுகளைப் பேணப்படாமை காரணமாக கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(உ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 121,425.42 மில்லியன் நடைபெறும் வேலை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 4,460 மில்லியன் தொகையான 144 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு திரட்டப்பட்டவற்றின் கிரயம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது. மேலும், அவற்றில் ரூபா 122.64 மில்லியன் கிரயத்திலான ஒன்பது செயற்திட்டங்கள் நான்கு ஆண்டுகளிற்கு முன்னரே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிட்ட நடைபெறும் வேலை மீதி அவற்றில் உள்ளடக்கப்பட்ட மீதிகள் அசாதாரணமான எதிர்மறை காரணமாக ரூபா 20.87 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) ரூபா 1,007.14 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் 3 தொடக்கம் 7 ஆண்டுகள் வீச்செல்லை கொண்ட காலமாக மாற்றமடையாதிருந்தது.

(iv) ரூபா 129.1 மில்லியனிற்காக சபையால் கையேற்றப்பட்ட இரண்டு வெளித்தரப்பு செயற்திட்டங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய தரப்பினருக்கு பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அவை மேற்குறிப்பிட்ட நடைபெறும் வேலை மீதியில் இருந்தது.

(v) ரூபா 87.67 மில்லியன் கிரயத்திலான மூன்று செயற்திட்டங்கள் பூர்தியாக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டது தொடர்பில் சில செலவினம் உரிய சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது.

(vi) கொழும்பு பெரும்பாக புனரமைப்புச் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை மீதி சபையின் கணக்குகளில் இரண்டு தடவை சம்பளங்களின் மீளளிப்பை பதிவு செய்தல் மற்றும் அவற்றிலிருந்து மேந்தலைச் செலவினம் விடுபாடு காரணமாக ரூபா 2.02 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vii) களுத்தறை பிராந்திய ஆதார நிலையமானது நடைபெறும் வேலையுடன் தொடர்புபட்டிருக்காத செலவினத்தின் ரூபா 999,511 ஆன தொகை உள்ளடக்கியிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய கடன் வட்டியின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,431.66 மில்லியன் தொடர்புபட்ட மீதி தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வருமானமற்ற தண்ணீர் (என்ஆர்டபிள்யூ) பொறியியல் கற்கை/ பிரதான திட்டம் என்பவற்றில் ஆலோசனை சேவைக்காக பெறப்பட்ட கடன் தொடர்பில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வட்டி முறையே ரூபா 2.2 மில்லியன் மற்றும் 2.48 மில்லியன் தொகைகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பற்ற பகுதிகளிற்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் - கட்டம் III தொடர்பில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 77.24 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இரண்டாவது அரையாண்டிற்கு பெறவேண்டிய வட்டியும் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டு தொடர்பான வட்டி கணக்கிடப்பட்டிருக்காதுதுடன் கடன் அல்லது மானியமாக சபைக்கு வழங்கப்பட்ட வசதி இனங்காணப்படாமை காரணமாக ஸ்பானீஸ் சுனாமி வசதி நிதியத்தின் கீழ் மொறட்டுவ, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பிற்கான குடிதண்ணீர் சுத்திகரிப்பு வசதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான செயற்திட்டம் தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 34.14 மில்லியன் தொகையான கடன் மீதிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

சபையின் தலைவர் இது தொடர்பில் "*திறைசேரியானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு அரசாங்க உரிமை மூலதனத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவிருக்கின்ற கடன் மற்றும் வட்டியை மாற்றுவதற்கு அனுமதித்திருந்தது. 2015 ஆம் ஆண்டுக் கணக்குகளில் நிலுவையாகவிருக்கின்ற கடன் மற்றும் வட்டியை மாற்றுவதற்கான கணக்கீட்டுப பதிவு எடுக்கப்படும்*" என குறிப்பிட்டார்

(எ) ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 88.12 மில்லியன் தொகையான மீளாய்வாண்டிற்கான உபகடன்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 88.12 மில்லியன் தொகையான உபகடன்கள் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை கணக்குகளிலிருந்தும் விடுபட்டிருந்தது.

(ஏ) 2009 இல் திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பிரான்ஸ் அரசாங்கம் மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மையால் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவி ரூபா 133.72 மில்லியனாகும். பொதுத் திறைசேரியானது மானியமாக அதில் அரைவாசியை கருதியிருந்ததுடன் மீதி அரைவாசி உப கடனாக கருதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையானது 2009 இல் கடனாக முழுத் தொகையும் கணக்கிடப்பட்டதுடன் 2012 இல் தவறினை திருத்தியிருந்தது. ஆனால், ஆண்டின் போது முழுத் தொகைக்காகவும் கணக்கிடப்பட்ட வடடியும் 2013 இல் திருத்தப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் ஆண்டின் தேறிய இலாபம் மற்றும் 2013 சனவரி 01 இல் உள்ளவாறான நிறுத்தி வைத்த இலாபம் முறையே ரூபா 4.01 மில்லியன் மற்றும் ரூபா 12.03 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது அதேநேரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டியவைகள் ரூபா 16.05 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு மானியக் கணக்கு மீதி ரூபா 128,841.23 மில்லியனாக இருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 5.94 மில்லியன் மொத்தமான பணிக்கொடை பணிக்கொடைக்கான ஏற்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் மானியக் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டிருந்தது. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பணிக்கொடை ஏற்பாட்டுக் கணக்கு மற்றும் மானியக் கணக்கு மீதி அதே தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ii) யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் மற்றும் சமூதாய அடிப்படை நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டம் என்பவற்றிற்காக

பெறப்பட்ட முறையே ரூபா 339.4 மில்லியன் மற்றும் ரூபா 49.21 மில்லியன் வெளிநாட்டு மானியம் மற்றும் தொடர்புபட்ட நடைபெறும் வேலை சபையின் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய நீர் வழங்கல் இணைப்புக்கள் கடன்பட்டோராக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆனால், தண்ணீர் வாடிக்கையாளர்களாக செலுத்தப்பட்ட மாதாந்த தவணைப்பணங்கள் புதிய இணைப்பு கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், நிதிக் கூற்றில் காட்டப்பட்ட புதிய இணைப்பு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 17.31 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதியை வெளிப்படுத்தியது. மேற்குறிப்பிட்டவை காலாவாதியானவை காரணமாக புதிய இணைப்பு வருமானமும் அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஓ) கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 27.06 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான பொறுப்புக்கள் மற்றும் வருமானக் கணக்குகளிலுள்ள வரவு மீதிகள் ரூபா 122.45 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்கிலுள்ள செலவு மீதிகள் அசாதாரணமாக இருக்க வேண்டுமென காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் மற்றும் நிதி நிலைமை சீரடைந்திருந்தது.

(ஔ) ரூபா 10,455.8 மில்லியன் தொகையான நீர் வழங்கல் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட 11 வெளிநாட்டு கடன்களிற்கான உப கடன் உடன்படிக்கைகள் பொதுத் திறைசேரியுடன் கைசாத்திடப்பட்டிருக்காததுடன் இதன்விளைவாக, அவர்களுடைய கடன் மற்றும் மானியப் பகுதிகள் கணக்காய்வில் தனித்தனியாக இனங்காண முடியவில்லை. எனவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதியின் உண்மைத்தன்மை மற்றும் ஒப்பீட்டுத்தன்மை பின்போட்ட மானியம், பிற்போட்ட மானியத்தின் திரட்டு மற்றும் வட்டிச் செலவினம் மற்றும் பொறுப்புக்கள் போன்றவற்றை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(க) ரூபா 37.61 மில்லியன் தொகையான சரிசெய்யவேண்டிய வேலைகள் தொடர்பில் ஏற்பட்ட நிர்மாணக் கிரயத்தின் பெறவேண்டிய மீதிகள் தொடர்புபட்ட வாடிக்கையாளர் முற்பணங்களிற்கு எதிராக சரிசெய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் வைப்புக்களின் மற்றும் முற்பணங்களின் கீழ் முறையற்றரீதியின் காட்டப்பட்டிருந்தது.

(கா) 2000 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களிற்கு முற்கொண்டுவரப்பட்ட செலுத்த வேண்டிய செயலற்ற சம்பளங்கள் மற்றும் கூலிகள் கணக்கு மீதிகள் ரூபா 36.87 மில்லியனாகும். எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்த 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் கூலிகள் தொடர்பில் ரூபா 8.8 மில்லியன் தவறு திருத்தம் மீளாய்வாண்டிலும் திருத்தப்படாதிருந்த மேற்குறிப்பிட்ட கணக்கு மீதிகளிற்கு எதிராக தவறுதலாக சரிசெய்யப்பட்டிருந்தது.

(கி) மீள செயற்படுத்த வேண்டிய வேலைகளின் 61 திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 28.51 மில்லியன் தொகையான தெளிவுபடுத்தப்படாத மீதிகள் அந்த திட்டங்கள் தொடர்பில் மீள செயற்படுத்த வேண்டிய வாடிக்கையாளர் கணக்கில் அவதானிக்கப்பட்டது.

(கீ) ரூபா 363 மில்லியன் ஸ்பானிய சுனாமி வசதிகள் நிதியை பயன்படுத்தி மொறட்டுவை, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பிற்கான குடி தண்ணீர் சுத்திகரிப்பு வசதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்தின் செயற்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கடல் நீர் சுத்திகரிப்பு பொறி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகள் கடந்த பின்னரும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட வசதிகள் 2010 யூலையிலிருந்து பிரச்சனைகள் தொடங்கப்பட்டிராமயைால் செயற்பாட்டில் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2010 முதல் 2013 வரையான காலத்திற்காக மின்சாரம், வாகனங்களை வாடகைக்கமர்த்தல் மற்றும் அலுவலக உபகரணங்களிற்கான சேவை உடன்படிக்கை என்பவற்றிற்காக ரூபா 14.8 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.

(கு) 29 செயற்திட்டங்கள் தெடர்பான ரூபா 10,358.38 மில்லியன் கூட்டு மொத்தத் தொகை 2013 திசெம்பர் 31 இல் காலக்கழிவுக்குட்படுத்தப்படாமல் 8 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையால் இருந்தது. ஒன்றிணைக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களின் அளவு அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான சொத்துக்களின் விபரங்கள் இன்மையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(கூ) குறித்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கமுடியாதிருந்த வெளிநாட்டு மானியமாக கணக்கிடப்பட்டிருந்த ரூபா 2.45 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான கொடுக்கல் வாங்கல்கள் 2013 திசெம்பர் 31 இல் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) ரூபா 1,252.66 மில்லியன் தொகையான யுனிசெப் மற்றும் செஞ்சிலுவை சங்க அமைப்புக்களால் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிராந்திய ஆதார நிலையங்களிற்கு நன்கொடையளிக்கப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ஒன்றுதிரட்டப்படாமல் உரிய மானியங்களின் கீழ் கணக்கிடப்படாமல் தலைமை அலுவலக மானிய கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(கே) சந்தை வீதங்களிற்கு கீழான வட்டி வீதங்களில் வழங்கப்பட்ட அரசாங்க கடன்களின் நலன்கள் நிதிக்கூற்றுக்களில் அரசாங்க மானியங்களாக கருதப்பட்டிருந்தது.

இது தொடர்பில் சபையின் தலைவர் ''அரசாங்கமானது மானியங்கள் மற்றும் கடன்கள் மற்றும் துணைநிலைக் கடன்களிற்கு ஒன்றிணைக்கபப்படாத ஏனைய உதவிகளுடன் வழங்குநர்கள் வழங்கிய கடன் திட்டங்களிற்கு இடையில் மூலதன வழங்குநர் பங்குகள் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, அரசாங்கம் வழங்கியிருந்த ஒரே நிபந்தனைகளில் அடிப்படையில் கடன்கள் வழங்க போட்டி அமைப்புகள் இருக்கவில்லை. எனவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன் திட்டங்களின் வட்டி வீதங்களின் சந்தை வீதத்தை பெற முடியவில்லை'' என குறிப்பிட்டிருந்தார்.

(கை) கணக்காய்வுச் தெரிவுச் செவ்வையின் அடிப்படையில் மீளாய்வாண்டு இறுதியில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட ரூபா 283.59 மில்லியன் கூட்டு மொத்த தொகையான கட்டுநிதிய கணக்கு மீதிகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கொ) யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் மற்றும் இரத்மலானை, மொரட்டுவை மற்றும் ஜா ஜால/எக்கல கழிவு நீர் செயற்திட்டம் போன்றவற்றின் நடைபெறும் வேலை மீதி ரூபா 389.04 மில்லியன் மற்றும் ரூபா 22.01 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கோ) உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் மற்றும் திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் என்பவற்றின் கட்டுநிதிய மீதியானது நடைபெறும் கட்டுநிதிய கணக்குகளிற்கு கொண்டுவரப்படாமை மற்றும் கடன் மீதிகள் தவறான கணக்கீடு காரணமாக முறையே ரூபா 145.62 மில்லியன் மற்றும் ரூபா 291,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பட்டியல்களில் காட்டப்பட்ட வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகளிற்கும் இடையில்

முறையே ரூபா 180.42 மில்லியன் மற்றும் ரூபா 593,910 தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) களுகங்கை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் வட்டி மீதிகளிற்கு இடையில் ரூபா 886,102 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு விசேட செயற்திட்டங்களிற்காக செலுத்தப்பட்ட முற்பண மீதிகளிற்கும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 1,087.44 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 13 கடன்பட்டோர் கணக்குகள் தொடர்பான ரூபா 819.63 மில்லியன் மொத்தமான வரவு மீதிகள் மற்றும் 11 கடன்கொடுத்தோர் கணக்குகள் தொடர்பான ரூபா 266.62 மில்லியன் மொத்தமான செலவு மீதிகளும் கட்டுப்பாட்டு கணக்குகளுடன் தனிப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் இணக்கம் செய்வதற்கான முறைமையின்மை காரணமாக இணக்கம் செய்யப்படாது இருந்தது. அவற்றில் ரூபா 50.42 மில்லியன் மொத்தமான செலவு மீதிகள் மற்றும் ரூபா 137.81 மில்லியன் மொத்தமான வரவு மீதிகள் மூன்று ஆண்டுகளை விட பழமைவாய்ந்ததாக இருந்தது.

(உ) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட பொருளிருப்பு முறைமை ஊடாக போதிய தகவல்களை உருவாக்கத் தவறியமை காரணமாக பிரதான களஞ்சியத்திலுள்ள பற்றுவைத்தலுடன் தொடர்பான உருப்படிகள் தொடர்பான இருப்பு பதிவேட்டின் பிரகாரம் உள்ள மீதிக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமைக்கும் இடையில் ரூபா 16.44 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) மேல் மத்திய பிரதேச ஆதார நிலையத்தின் தண்ணீர் விற்பனைகள் தொடர்பில் நிதிக்கூற்றில் காட்டப்பட்டவாறு பற்றுவைக்கப்பட்ட பெறுமதிசேர் வரிக்கும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வு மூலம் கணிப்பிடப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 3.7 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(எ) பிராந்திய அலுவலகங்களின் நிதிக்கூற்றில் காட்டப்பட்டவாறு நடைபெறும் வேலை மீதிகள் விரிவான பட்டியல்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு ரூபா 4.39 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் காட்டப்பட்டவாறு நடைபெறும் வேலை மீதிகள் திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் தனிப்பட்ட நிதிக்கூற்றில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் அந்த இரண்டு நிதிக் கூற்றுக்களிற்கும் இடையில் ரூபா 953.22 மில்லியன் தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஐந்து கணக்குகள் தொடர்பான ரூபா 1.83 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத வரவு மீதிகளும் ஏழு கணக்குகள் தொடர்பான 15.12 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத செலவு மீதிகளும் தெளிவுபடுத்தப்படாமல் கருத்திற்கொள்ளக்கூடிய காலமாக நிதிக்கூற்றுக்களில் இருந்தது.

(ஒ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5.11 மில்லியன் தொகையான திருகோணமலை பிராந்திய அலுவலகத்தின் சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கு மீதி 3 ஆண்டுகள் காலத்திற்கு மேலாக தெளிவுபடுத்தப்படாமல் கணக்குகளில் விடப்பட்டிருந்தது.

(ஓ) சபையின் வர்த்தகப் பிரிவால் விற்பனையிலிருந்தான வருமானம் தொடர்பான தகவல்கள் பேணப்படுகின்ற போதிலும் அளவை மானிகள் விற்பனை, பவுசர் வழங்கல் (503) மற்றும் மொத்த வழங்கல்கள் (502) தொடர்பில் நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைக்கும் அந்தப் பிரிவால் பேணப்பட்ட பதிவேடுகளிலுள்ள தொகைக்கும் இடையில் முறையே

ரூபா 1,088.2 மில்லியன், ரூபா 4.5 மில்லியன் மற்றும் ரூபா 101.8 மில்லியனான குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஔ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னமும் இனங்காணப்படாத மற்றும் இணக்கம் செய்யப்படாத நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 236.23 மில்லியன் மற்றும் ரூபா 190.26 மில்லியன் தொகையாகும்.

செயற்பாடற்றதாக ஏற்கனவே வகைப்படுத்தப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட வரவு மற்றும் செலவு மீதிகளிற்கு மேலதிகமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 57.41 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான பல ஏனைய இனங்காணப்படாத மீதிகளும் உள்ளன.

### 2.2.4 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (பிஆர்டிஏ) மற்றும் நகர சபைகள் என்பவற்றில் வைத்திருந்த ரூபா 33.08 மில்லியன் குறுதிய கால வைப்பு மீதிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது இருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் முந்திய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4.38 மில்லியன் முற்பணம் 2015 யூலை இறுதி வரையும் தீர்க்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பில் சபையால் அவற்றில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றில் காட்டப்பட்டவாறு ஏனைய அறவிட வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய கடன்பட்டோர் மீதிகள் ரூபா 64 மில்லியனாக இருந்தது. அதில், மூன்று ஆண்டுகளைவிட பழமைவாய்ந்த மீதிகள் ரூபா 22.33 மில்லியனானதுடன் 11 ஆண்டுகள் பழமைவாய்ந்த மீதிகள் ரூபா 12.3 மில்லியனாகும். கொழும்பு மாநகர சபை நிலுவையாகவிருந்த மீதி ரூபா 54 மில்லியன் அல்லது மொத்த நிலுவை மீதியில் 84 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்த மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர் மீதி ரூபா 28.52 மில்லியனானதுடன் அதில் ரூபா 16.26 மில்லியன் ஒன்பது ஆண்டுகள் பழமைவாய்ந்ததுடன் இருக்கின்ற மிகுதி மூன்று ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 3 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. அந்த மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரூபா 9.21 மில்லியன் தொகையான கழிவு நீர் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிரக்கவில்லை.

(ஊ) பொறுப்புடைய நபர்களிடமிருந்து 2010 மற்றும் 2013 ஆண்டுகளில் இனங்காணப்பட்ட களணி மற்றும் கேகாலை பிராந்திய அலுவலகம் மற்றும் நிலத்தடி நீர் பிரிவு என்பவற்றின் களஞ்சியத்திலுள்ள இருப்புக் குறைவு முறையே ரூபா 2.42 மில்லியன், ரூபா 586,232 மற்றும் ரூபா 1.8 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 8 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரூபா 9.49 மில்லியன் தொகையான உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுவதற்கு நடவடிடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்ட ரூபா 21.27 மில்லியன் தொகையான ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட உத்தியோகத்தர் கடன்கள் மற்றும் முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2012 ஆம் ஆண்டில் மன்னார் நீர் வழங்கல் திட்டத்தின் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட ரூபா 1.40 மில்லியன் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் பொருத்திகள் மீளபொருத்தப்பட்டோ அல்லது திருப்பப்பட்டோ இருக்கவில்லை.

(ஒ) 1997 முதல் 2012 வரை மற்றும் 1999 முதல் 2012 வரையான காலத்தின் போது ரூபா 1.06 மில்லியன் மற்றும் ரூபா 19.3 மில்லியன் தொகையான முறையே வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 1995 முதல் 2009 வரையான காலத்தின் போது கொள்வனவு செய்வதற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 906,013 தொகையான முற்பணங்கள் 2015 யூலை இறுதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்திய ஆதார நிலையங்களின் ரூபா 30.5 மில்லியன் மற்றும் ரூபா11.34 மில்லியன் பிரச்சனைக்குரிய மீதிகள் 3 ஆண்டுகள் காலத்திற்கு மேலாக தெளிவு படுத்தப்படாமல் சேகரிப்பக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இருந்தது.

(க) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 40.75 மில்லியன் தொகையான இடைப்போக்கிலுள்ள பொருட் கணக்கு மீதிகள் புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(கி) ரூபா 6.27 மில்லியன் மொத்தமான வாடிக்கையாளர் முற்பணக் கணக்கு மீதிகள் எவ்வித வேலைகளும் மேற்கொள்ளாமல் 15 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(கீ) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மேல் தெற்கு, மேல் வடக்கு பிராந்திய ஆதார நிலையங்களின் மீள செயற்படுத்தக்கூடிய செயற்திட்டங்ளிற்காக பெறப்பட்ட வாடிக்கையாளர் முற்பணங்களிலிருந்து முறையே ரூபாப 2.81 மில்லியன் மற்றும் ரூபா 1.06 மில்லியன் தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது.

(கு) ரூபா 145.18 மில்லியன் மொத்தமான பெறவேண்டிய முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2 ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்த ரூபா 45.87 மில்லியன் மொத்தமான செலுத்த வேண்டியவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கூ) ரூபா 8.55 மில்லியன் மொத்தமான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் விசே செயற்திட்டங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 5.52 மில்லியன் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் முறையே இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் 2004 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக இருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 12.68 மில்லியன் மற்றும் ரூபா 1.35 மில்லியன் தொகையான முறையே 00/0/20/264/0 மற்றும் 00/0/65/264/0 ஆம் இலக்க கணக்கு குறியீடு தொடர்பில் குறுகிய கால பாதுகாப்பு மீதிகளின் விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 04 பிராந்திய அலுவலகங்கள் தொடர்பில் ரூபா 40.27 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரிகளின் கழித்த வரிகளின் செலுத்தாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) நீண்ட காலமாக மாற்றமடையாமல் நடைமுறைவேலைகளில் இருந்த மீதிகளின் ரூபா 1,007.15 மில்லியனிற்கான காரணம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) ஒரு வருடத்தினை விட குறைந்த அதிகளவான விடயங்களில் மீள அறவிடவேண்டிய வேலைகள் குறுகிய காலத்திற்கும் முடியக்கூடிய வேலைகளாக இருந்தன. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பொறுப்பேற்கப்பட்ட 30 மீள அறவிடவேண்டிய வேலைகள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 70.82 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் எவ்வித மாற்றங்களும் இல்லாமல் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பொறுப்பேற்கப்பட்ட 76 மீள அறவிடவேண்டிய வேலைகள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 284.65 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் எவ்வித மாற்றங்களும் இல்லாமல் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் தனிப்பட்ட வேலை தொடர்பான தாமதத்திற்கான காரணங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) ரூபா 69.17 மில்லியன் தொகையான மீள அறவிடவேண்டிய வேலைகள் தொடர்பான விரிவாக பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தின் ரூபா 14.21 மில்லியன் பெறுமதியான 17 மீள அறவிடவேண்டிய தண்ணீர் திட்டங்கள் மற்றும் திருகோணமலை பிராந்திய அலுவலகத்தின் ரூபா 7.58 மில்லியன் பெறுமதியான 08 மீள அறவிடவேண்டிய தண்ணீர் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஊ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருகோணமலை பிராந்திய அலுவலகத்தில் ரூபா 6.04 மில்லியன் மீள செயற்பட வேண்டியவேலை அறவிடவேண்டிய மீதிகள் அவதானிக்கப்பட்டன. அந்த மீதிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காததுடன் அந்த மீதிகள் எவ்வித புலனாய்வும் மேற்கொள்ளப்படாமல் 3 ஆண்டுகளை விஞ்சிய காலமாக ஆண்டு தோறும் கணக்குகளிற்கு முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) ரூபா 44.34 மில்லியன் முற்பணங்களிற்கான ஒப்பந்தங்களின் விபரங்கள் அவை பூர்த்தியாக்கப்பட்டிருந்தனவா அல்லது கணக்காய்விற்கு கிடைத்திருந்தனவா என உறுதிப்படுத்துவதற்கு 2000 முதல் 2008 வரையபன காலத்தின் போது வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 2.26 மில்லியன் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 135.28 மில்லியன் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 210,017.62 மில்லியன் என்பவற்றின் விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பவற்றிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) சபையின் களஞ்சிய முகாமைத்துவ வழிகாட்டி | சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் 3 மாதங்களிற்குள் பழுதடைந்த விடயங்கள் கைதவிர்க்கப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ இருக்க வேண்டும். ஆனால், ரூபா 19.29 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளை விட அதிகமான காலம் இருப்பில் இருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 417 மில்லியன் நேரொத்த வரிக்குப் முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,050 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 633 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு அளவைமானி விற்பனை வருமானம் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகளில் அதிகரிப்பதற்காக முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | 2013 ரூபா மில்லியன் | 2012 ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| வருமானம் | 17,217 | 14,558 | 2,659 | 18.26 |
| விற்பனைக்கிரயம் | (10,157) | (9,036) | (1,121) | 12.41 |
| **மொத்த இலாபம்** | **7,060** | **5,552** | **1,538** | **27.85** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் மிகைகள் | 1,195 | 1,586 | 391 | -24.65 |
| நிர்வாகச் செலவினம் | (5,831) | (5,838) | 7 | -0.12 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (559) | (54) | (505) | 935.18 |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **1,865** | **1,216** | **649** | **53.37** |
| நிதி வருமானம் | 225 | 214 | 11 | 5.14 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிக் கிரயம் | (1,040) | (1,013) | (27) | 2.67 |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **1,050** | **417** | **633** | **151.80** |
| வரி | (47) | (40) | (7) | 17.50 |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | **1,003** | **377** | **626** | **166.04** |

இதன்படி, இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறை ஆண்டின் மொத்த இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 27.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பு ஏனைய செயற்பாட்டுச் செலவினம் 935 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் 25 சதவீதத்தால் ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் குறைவடைந்தமை என்பவற்றைக் சாதாரணமாக்குவதற்கு போதிய வலுவிலிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ஒரு ஊழியரின் ரூபா 571,087 பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் 24 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2012 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 38,941 ஆனது 2013 ஆம் ஆண்டில் ரூபா 100,902 இற்கு அதிகரித்திருந்ததுடன் 159 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது.

(இ) சபையானது நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களில் வட்டியாக உற்பத்தி செய்யப்பட்ட தண்ணீரின் அலகுகொன்று ரூபா 4.93 தொகை ஏற்படுவதற்கு இருந்ததுடன் இது அலகு ஒன்றிற்கான மொத்த உற்பத்திக் கிரயத்தின் 11 சதவீதம் உண்மையாக, ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயம் அதிகரித்ததின் விளைவால் முன்னைய ஆண்டிற்கு எதிராக இரண்டு சதவீத குறைவை வெளிப்படுத்துகின்றது.

## 3.3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 செயலாற்றல்

(அ) நிதிச் செயலாற்றல்

பொதுத் திறைசேரியின் ஊடாக சபையால் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் மீதி மொத்தச் சொத்துக்களின் ரூபா 36,587 மில்லியன் அல்லது 14.69 சதவீதம் ஆகும். கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம் ரூபா 5,825 மில்லியனானதுடன் இதன்படி தாமதத்திற்காக செலுத்தப்பட்ட மேலதிக வட்டி ரூபா 280 மில்லியனாகும்.

| **ஆண்டு** | **நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம்** | | | **உரிய திகதியில் வட்டி செலுத்தப்படாமைக்கு செலுத்தப்பட்ட மேலதிக வட்டி** |
|---|---|---|---|---|
| | **முதல் கொடுப்பனவு** | **வட்டி** | **மொத்தம்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 2013 | 1,005 | 1,750 | 2,755 | - |
| 2012 | 990 | 682 | 1,672 | 59 |
| 2011 | 957 | - | 957 | 115 |
| 2010 | 441 | - | 441 | 106 |
| **மொத்தம்** | **3,393** | **2,432** | **5,825** | **280** |

**(ஆ) சுத்தமான நீரின் உற்பத்தி மற்றும் விநியோகம்**

சபையானது 2012 இலுள்ள ரூபா 526 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் போது 547 மில்லியன் கனமீற்றர் சுத்தமான தண்ணீரை உற்பத்தி செய்திருந்தது. இது 4 சதவீத அதிகரிப்பை காட்டியது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட தண்ணீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 120,084 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் அதனை ஒப்பிடும் போது 13.5 சதவீத குறைவைக் காட்டுகின்றது.

**(இ) வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)**

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 547.0 | 525.6 | 490.0 | 469.0 | 449.0 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 381.6 | 368.5 | 344.5 | 321.5 | 309.2 |
| வருமானமற்ற தண்ணீர் (கன மீற்றர்) | 165.4 | 157.1 | 145.5 | 147.5 | 139.8 |
| தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற தண்ணீர | **30.24** | **29.89** | **24.64** | **31.45** | **31.14** |

இதன்படி, இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், நீர் இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் என்பவற்றினால் வருமானமற்ற நீர் 30.24 சதவீதத்தைப் பிரதிதித்துவப்படுத்திய அதேநேரம் 2013 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் 47.71 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமையைத் தடுப்பதற்குத் தவறியமை காரணமாக 2013 இல் நுகரப்பட்ட நீரின் ஒரு அலகிற்கு ரூபா 7.15 மேலதிகத் தொகை சபையால் ஏற்கவேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது. அது ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயத்தில் 43 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) சபையானது சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், பிரதான நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் நடைமுறையை விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் 2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் வீதம் 5.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்கான சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டங்கள்

அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர்க் குழாய்களின் போதிய மீள் நிருமாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

நீர்க் கசிவுகள் காரணமாக மாற்றப்பட வேண்டிய பிரதான நீர் விநியோகக் குழாய்கள் இதுவரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. பாரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(iv) கொழும்பு நகரைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) கழிவுநீர் முறைமை**

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவு நீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

சபையின் தலைவர் இது தொடர்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*தேசிய கொள்கையில் எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகையின் 7 சதவீதத்திற்கு கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளின் மேவுகை அந்த செயற்திட்டம் உத்தரவாதமளிப்போரை இனங்காணாமல் நன்கொடையாளர்களால் எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட கழிவு நீர் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்தமையால் அடையமுடியாதிருந்தது.*

**(உ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளிற்காக அதிகமான செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ii) பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

மீளச் செயற்படககூடிய வேலைகளில் சபையால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இலாபஎல்லை 10 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான வீச்சில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பின்வரும் செயற்திட்டங்கள் அசாதாரண இலாபத்தை பதிவுசெய்திருந்தது.

| செயற்திட்டம் | மொத்தப் பெறுவனவு | செய்யப்பட்ட வேலைக் கிரயம் | இலாபம் | மொத்த பெறுவனவின் சதவீதமாக இலாபம் |
|---|---|---|---|---|
| ------------------ | ------------------ | ------------------ | ------------------ | ------------------ |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 00/0/ஈசீ/392/0 | 4,350,360 | 1,319,360 | 3,031,000 | 70 |
| 00/0/ஈசீ/392/0 | 6,703,243 | 1,608,018 | 5,095,225 | 76 |

(ஆ) 1999 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 12.96 மில்லியன் தொகையான மிகையூதியத்திற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் பின்னர் இந்த தொகை பெறவேண்டியவையாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, இது உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட வட்டியில்லாத கடனாக கருத முடிந்தது.

(இ) சபையானது பொதுத் திறைசேரியின் விசேட அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் அதன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் சார்பில் செயற்திட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளம் மற்றும் ஏற்பட்ட செலவினங்களில் மேந்தலைச் செலவினமாக 20 சதவீதம் சாட்டுதல் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட மொத்த மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 234.01 மில்லியனர்கும்.

(ஈ) 2002 ஆம் ஆண்டில் கப்புக்கல தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக ரூபா 16 மில்லியன் செலவு செய்து காணியொன்றை காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் சுவீகரித்திருந்த போதிலும் அந்த திகதியில் அதிலிருந்த பாரிய வெடிப்பு காரணமாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஐப்பான் வங்கியால் நிதியளிக்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் செயற்திட்டம் (எஸ்எல்-66) வெற்றியளித்திருக்காததுடன் இதன் விளைவால் அந்த செயற்திட்டமானது பின்னர் இரத்துசெய்யப்பட்டிருந்தது. எனினும் திரண்ட நிதியிலிருந்து ரூபா 354.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) வேலைத்தள தயார்ப்படுத்தல், ஊதியங்கள் மற்றும் தாபனச் செலவினம் என்பன தொடர்பில் திரட்டு நிதியம் மற்றும் கடன்களிலிரந்து செலவழித்த ரூபா 171.6 மில்லியன் தொகை சபைக்கான நட்டமாக கருதப்படாமல் நடைபெறும் வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 172 மில்லியன் ஆலோசனைக் கிரயம் கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆனால் கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்திற்காக ஏற்பட்டிருந்த ஆலோனைக்கான ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயம் அதே தொகையால் குறைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இது சபைக்கு நட்டமாக உள்ளதா என்பது கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

இது தொடர்பில் சபையின் தலைவர் ‘‘கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 172 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணம் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திக் கீழ் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது.’’ எனக் குறிப்பிட்டிருந்தார்.

(iii) ரூபா 7 மில்லியனிற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு ஒழுங்குபடுத்தல் கருவி சொத்தாக கருதப்பட்டிருக்கவில்லை.

(iv) ரண்டிய செயற்திட்டத்திற்காக மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையில் ரூபா 4 மில்லியன் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் சபையின் தலைவர் ''ரண்டிய செயற்திட்டத்திற்காக ரூபா 4 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இது ரண்டிய செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைக்குள் எடுக்கப்பட்டிருந்தது'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

## 3.5 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 இல் வழங்கப்பட்ட சுவீடிஸ் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் (எஸ்ஐடிஏ) நிதியளிக்கப்பட்ட மொறட்டுவ/ இரத்மலானை மற்றும் ஜா எல / எக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் எஸ்பி/எஸ்ஐடிஏ/ஆர்எம்/ஜேஈ/டபிள்யூடபிள்யூ ஆம் இலக்கமுள்ள ஒப்பந்தமானது ஒப்பந்தகாரரின் வங்கி கடன் தீர்க்கமுடியாமை காரணமாக 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டமானது மேற்குறித்த ஒப்பந்தகாரர் தொடர்பில் வெளிநாட்டு வங்கியொன்றிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி மற்றும் பிடித்துவைத்தல் பிணைமுறி ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்து சான்றுபடுத்தலைப் பெறுவதற்கு 2006 இன் கொள்வனவு கைநூலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. இதன்விளைவால், செயற்திட்டமானது ஐ.அ.டொலர் 9,065,048 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 7,957,086 பெறுமதியான பிடித்துவைத்தல் பிணைமுறி என்பன காசாக்குவதற்கு தவறியிருந்தது. மேற்குறிப்பிட்ட தவறு காரணமாக, செயற்திட்டமானது உள்நாட்டு சட்ட ஏற்பாடுகளைப் பெறுவதற்கு முயற்சிக்காதிருந்ததுடன் சர்வதேச சட்டச் செயற்பாடுகளிற்குள் நுழைவதற்கான சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திலிருந்து சபைக்கான நட்டம் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் அதன் பொறுப்பாண்மையை 2015 யூலை இறுதி வரையும் நிர்ணயித்திருக்கவில்லை.

(ஆ) தம்புள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூபா 2.13 மில்லியன் பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் பொருத்திய பின்னர் இரண்டரை ஆண்டுகள் கடந்த பின்னரும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6. சொத்துக்கள் முகாமைத்துவம்

### ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக உரிய அமைச்சு மற்றும் மாநகர சபைகளிற்கு ஐம்பத்து ஆறு மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மற்றும் காப்புறுதிகளிற்காக மீளாய்வாண்டின் போது சபையால் அந்த மோட்டார் வாகனங்களிற்கு ரூபா 1.48 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது, நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணக்கஞ் செய்தல்
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) நாளேட்டுப் பதிவுகள்
(ஈ) செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு
(உ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்